தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு	மலர்,
	௨௰௧௧	
௫௫	சித்தார்த்தி பங்குனி	௧௫
	1980 மார்ச், எப்ரல்	

கான் சாயபு சண்டை

(வரலாற்றுத் திறனாய்வு)

பேராசிரியர் - **சி. கோ. தெய்வநாயகம்,** எம். ஏ; எம். பில்.

(துணர் ௫௫ மலர் ௧௧ பக்கம் 192ன் தொடர்ச்சி)

15:00 கட்டிக்கொடுக்கப்பட்டான் கான் :

சுயநலமிக்க கானை அவனது நண்பர்களே வெள்ளையரிடம் பிடித்துக்கொடுத்து விட்டு தங்களைக் காத்துக்கொள்ள விரும்பினர்.

1764 ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ஆம் தேதி மனக்குழப்பம் தீர ஆண்டவனை வேண்டும் பொருட்டு கான் சாயபு தன் வழிபாட்டறையில் மாலை 5 மணியளவில் நமாஸ் செய்து கொண்டிருக்கின்றான். கண்களை மூடி, உலகை மறந்து மனதை ஒருமுகப்படுத்தி ஆண்டவனைத் தொழுதுகொண்டிருக்கும் போழ்து, அவனது உற்ற நண்பர்களாக இருந்த மார்ச்சென்ட், சீனிவாசராவ், படே சாயபு முதலியோர் அவன்மீது பாய்ந்து, அவனைப் பெருங் கயிறுகளையும், இருப்புச் சங்கிலியினைக் கொண்டும் கட்டிப்போட்டனர். அவர்களுக்குத் தெரியும் வெறுங்கயிற்றினை யெல்லாம் கான் அறுத்தெறிந்து விடுவான் என்று. இருப்புச் சங்கிலியாலும் கட்டிப்போட்டுவிட்டு இருப்பதை ''சண்முக முதலியார்'' எனும் கானின் உற்ற ஊழியன் கேள்வியுற்று தன் தலைவனை விடுவிக்கும் பொருட்டு, தன் நண்பர்கள் மார்ச்சென்ட், சீனிவாசராவோடு போராடி, இறுதியில் இறந்தான்.

துரோகிகள் வெள்ளையர்களுக்குச் செய்தி அனுப்பினர் கானைப் பிடிக்க முடியுமா? என எண்ணி வியந்த ஆங்கிலேயர் இவர்களின் செய்தியை நம்பாமல் தாங்களே கோட்டைக்குள் புகுந்து கான் கட்டுண்டமையைக் கண்டு அச்செய்தி உண்மையென அறிந்தனர்.

15:01 வெள்ளையர் காப்டன் பெரிக்னி இருப்புச் சங்கிலியால் கட்டுண்ட கானை மூடுபல்லக்கில் ஏற்றி மதுரை மக்களின் கண்களில் படாமல் செப்டம்பர் 14-ஆம் நாள் மாலை 5 மணிக்கு தங்கள் பாசறைக்கு மதுரைக் கோட்டையின் மேற்கு வாசல் வழியே கொணர்ந்தனர்.

16:00 நண்பர் புலம்பினர் :

கானுக்கு தூக்கு தண்டனையினை அளித்தது வெள்ளை நீதிமன்றம் ஏதோ ஆத்திரத்தில் அறிவிழந்து தன் தலைவனைக் காட்டிக் கொடுத்த மார்ச்சென்ட், தன் தலைவனின் அரும் பெருங்குணங்களை நினைந்து புலம்பினன். வெள்ளையரிடம் தன்னுரை ஏற்றுக்கொண்டு கானின் உயிரைக் காப்பாற்ற இரந்தான். சீனிவாசராவும் புலம்பினன்; ஆனல் வெள்ளையர் இசையவில்லை. கானின் முழு பலம் அவர்கள் அனுபவித்ததல்லவா எனவே அவனை உயிரோடு விட்டால் தங்க ளின் ஏகாதிபத்தியம் இந்நாட்டில் வேரூன்ற முடியாது என்பதனை யறிந்து, அவனுக்குத் தூக்குத் தண்டனையினை அளிக்க முனைந்தனர். மார்ச்சென்ட் புலம்பிக்கொண்டு தன் தாயகமாம் பிரான்சு சென்று, அங்கு மனநோயாளியாக தற்கொலை செய்துகொண்டு வான்முனை யில் மாண்டான். கானைக் காட்டிக்கொடுத்த சீனிவாச ராவை ஆங்கிலேயர் '' நன்றி கொன்றவன் '' எனும் முறையில் தூக்கி விட்டுக் கொன்றனர். காட்டிக் கொடுத்த தாண்டவராய பிள்ளை சோழவரத்தினைப் பரிசாகப் பெற்றான். பாபா சாகிப் பெருங்குடியினை பரிசிலாகப் பெற்றான்.

17:00 கானின் பயங்கர முடிவு:

1764 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள். ஆம், அதுதான் நம் மானவுணர்வுகள் தலையெடுத்து மாண்ட நாள். மதுரையினின்றும் திண்டுக்கல் செல்லும் நெடுஞ்சாலையில் முதலில் தெரிந்த ஒரு பெருமாமரத்தில் கான் தூக்கிலிடப்பட்டான். இதனை தாண்டவராயனின் ''மாறுநாட்டோலையினுலுன்னை இந்த மாமரத்து கிளையில் தூக்காமல் விட்டால்'' எனும் கடிதச் செய்தியாக இப் பாடல் புகழ்கிறது.

17:01 யானை போன்ற, ஆனல் வாகான முறுக்கேறிய உடல் படைத்த கானை வெள்ளையர்கள் நினைத்தவுடன் தூக்கினுல் கொல்ல முடியவில்லை. ''இறப்பிற்குத் தெரியும். கான் இறப்பினிலும் கொடியவன் என.'' என்பது போல் இரண்டு முறைகள் தூக்குக் கயிறு அறுந்து விழுந்து கானைக் கொல்லவில்லை. மூன்ருவதாகவும்,

வெள்ளையர் அவனது உடல் வலுவிற்கேற்ற பெருங்கயிற்றினைக் கொண்டு அவனைத் தூக்கிலிட்டனர். அதன்பின் இறந்த அவனது உடலத்தைக்கண்டு வெள்ளையர் அணுகக்கூட அஞ்சினர்.

17:02 ஆற்காட்டு நவாப் முகம்மது அலியின் ஆணைக்கேற்ப கான்சாயபின் உடல் கூறு கூறுகளாகச் சிதைக்கப்பட்டது. அக்கூறுகள் ஒரே இடத்தில் இருந்தால் மீண்டும் கான் உயிர்பெற்று தங்களை ஒழித்தாலும் ஒழிப்பான் என அஞ்சிய அவர்கள் கானின் தலையை திருச்சியிலும், வலது கையை திருநெல்வேலியிலும், இடது கையைத் தஞ்சையிலும், இரு கால்களையும் திருவாங்கூரிலும், உடலினை மதுரையின் புறநகராகிய சம்மட்டிபுரத்திலும் புதைக்கச் சொன்னார்கள். அஞ்சா நெஞ்சன் தமிழகத்தில் முதன் முதலில் வெள்ளையரை எதிர்த்து அவர்களைக்கலங்க அடித்த வீரப்பெருமகன் கான்சாகிப் நீலனின் முடிவு இவ்வளவு பயங்கரமான நிலையில் உடற் கூறுகள் தமிழகத்தின் பல்வேறு திக்குகளில் புதைக்கப்பட்ட செயல் அன்றுமுதல் அந்நிய ஆதிக்கத்தை நந்நாட்டின்னிறும் ஒழிக்க எழுந்த சுதந்திர வீரப்பயிர்கள் வளமாக வளர எருவிடப்பட்டதைப் போன்று அமைந்து நிறைவுற்றது

17:03 கான்சாகிபின் முடிபினைம்பற்றி ''கான்சாயபு சண்டை'' சற்றே மிகைப்படுத்தி மீயியற்கைச் செய்திகளையும் கூறுகின்றது.

கட்டுண்ட கானிற்கு கும்பெனியார் உணவும் நீரும் தந்தனராம். ''மதுகையின்றி வயிற்றுத்தீத்தணிய தாமிரந்து உண்ணுமளவை ஈன்மனே'' அம்மாவீரன் கான். அவ்வுணவினை காலால் எட்டி உதைத்தானும்.

17:04 சினம் மிகுந்த வெள்ளையர் கான் இதுவரையில் தங்களுக் கிழைத்த தொல்லைகளுக்குப் பழிவாங்கும் முகத்தான் கானின் கண் களில் பச்சைக் கற்பூரத்தை வைத்துக் கட்டினராம். அக்கொடுமை யினையும் கான் சகித்துக்கொண்டானும்.

17:05 இருமுறை தூக்குக் கயிற்றாலும் இறவாத கான், பிறகு தானே வாய்திறந்து தன் தலையின் உச்சியில் மலையாள மாந்ரீகன் கொடுத்த நரிக்கொம்பு புதைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை எடுத் தால்தான் தன்னுயிர் பிரியும் எனவும் கூறியதாகவும், வெள்ளையர் சூரி கொண்டு அவனது தலையின் உச்சியினைக் கிழித்து அந்நரிக் கொம்பினை அகற்றிய பின்பே, தூக்கிலிடப்பட்ட நிலையில் கான் இறந்தான் எனவும் கூறுகிறது இப்பாடல்.

17:06 பின்னும் இப்பாடல், கான், தன் வீரர்களின் கனவில் தோன்றி, தன் மனைவி மாசாவிடம் உள்ள மலையாள மாந்ரீகன் தந்த ''பொம்மக்கா சொம்புத் தண்ணீரை'' தன்னுடல்மேல் தெளித்துத் தங்கப்பிரம்பினுல் தட்டினுல்தான் உயிர்பெற்று மீண்டும் வாழமுடியும் என்பதாகக் கூறியதாகவும், இதனை அறிந்த வெள்ளை யர், இறந்துபோன கானின் சுண்டுவிரலை அறுத்துப் பார்த்த நிலை யில் சிவப்பு இரத்தம் எப்போதும்போல் சிதறியதாகவும், எனவே கானை அப்படியே முழு உடலாக வைத்தால் உயிர் பெற்றுவிடுவான் என முடிவு கண்டு அவனுடலைக் கூறுபடுத்தி வேறு வேறு திக்குக ளுக்கு அனுப்பியதாகவும் கூறுகிறது.

17:07 இதன்கண் கூறப்படும் மலையாள மாந்ரீகம், நரிக்கொம்பு சிமிழ், பொம்மக்கா சொம்பு நீர், தங்கத் தண்டம், மந்திரம் முதலி யன கானின் பெருமையினை, அவனிறந்தும் அவனுடலைக் கண்டு அஞ்சிய வெள்ளையரின் கோழைத் தனத்தினைப் பாமர முறையில் பாமர மக்கள் வெளிப்படுத்தக் கையாண்ட பாமரத்தனமே யாகுமே யொழிய, புளுகாகாது.

7:08 இதன்பின் கான் சாயபின் வீர மனைவி மாசா தன் குழந்தை யோடு திருவாங்கூர் சென்று திருவாங்கூர் அரசரிடம் அடைக்கல மாக வாழ்ந்தாள்.

18:00 வரலாற்றுச் சான்று :

கானின் உடற்குறை புதைக்கப்பட்ட இடம் தற்போது சம்மட்டி புரம் என அழைக்கப்படும் மதுரையின் புறநகர்ப் பகுதியாகும். அவனது சமாதியின்மீது பள்ளிவாசல் ஒன்றினை வெள்ளையரே கட்டி அவன் வீரத்தினைச் சிறப்பித்தனர். அப்பள்ளிவாசல் இன்றும் ''கான் சாயபு பள்ளி'' என விளங்குவதைக் காணலாம்.

18:01 கான் சாகிப் வாழ்ந்த வீடு மதுரையில் உள்ள எட்வர்ட் பூங்காவினின்றும் தெற்கு மாசி வீதிக்குச் செல்லும் பாதையில் உள்ள ஜடாமுனித் தெருவிலுள்ளது கண்டு போற்றத்தக்கதாகும். சிதம்பரத்தின் நடுவே ஓடும் வாய்க்கால் கான்சாகிப்பின் பெயரால் கான்சாகிப் வாய்க்கால் எனவழக்கப்படுவது மறியத்தக்கதாகும்.

இவ்வாருக அஞ்சாநெஞ்சம் படைத்த, சாதி சமய பேதங் கடந்த, முதல் இந்திய சுதந்திர வீரன் இரும்பு மனிதன் கான்சாயபு நீலன் எனப்படும் மருதநாயகத்தின் வாழ்வு முடிந்தது. சுதந்திர உணர்வும், தன்மானமும், வெள்ளையனை வெளியேற்ற வேண்டும்

என்ற உணர்வும், தமிழகத்தே தலையெடுக்க ஆரம்பித்து, அதன் விளைவு நாட்டுப்பாடல்கள் தோற்றம் "கான்சாயபு சண்டை" யின் வெளியீடு — பாமர மக்களிடையேயும் எழுந்த சுதந்திர தாகத்தின் வெளிப்பாடாக அமைந்தது. கானை நினைத்தபோதே பாமரரும் உணர்வு பெற்று ஆங்கிலேயரை ஒழிக்க முற்பட்டனர் எனலாகும்.

பயநூற் பட்டி

1 கான்சாகிபு சண்டை — வானமாமலை.
2 Manuscripts of Robert Orme } Annamalai university
3 Luciuhton's Diary notes } Publication.
4 'MohammedYusufKhan' The rebel commandant By 'Hill'
5 " திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்."
6 Dalaway Mudaliyars. B.J.M. Raja

பரிப்பெருமாள் - ஒரு மதிப்பீடு

கு. சிவஞானம், எம். ஏ.

(முன்தொடர்ச்சி துணர் 53 மலர் 11 பக்கம் 170)

காமப்புணர்ச்சியின் வகை :-

அருமையிற் கூடுதல்' பிரிந்து கூடுதல், ஊடிக் கூடுதல் என மூவகைப்படும் காமப்புணர்ச்சி எனப் பரிப்பெருமாள் உரைக்கின்றார் இது மணக்குடவர் கூறியதைக் கொண்டு கூறியது ஆகும். ஆனால் மூவகைக் கூடலுக்கும் மணக்குடவர் விளக்கம் தரவில்லை, பரிப் பெருமாள் விளக்கம் கூறுகின்றார்.

அருமையிற் கூடுதல் — கூடுதற்கு எளிது அன்மையால் ஒருவர் ஒருவரைக் கண்ட காலந்தொட்டும் ஒத்த நினைவினராய் நின்று கூடுதல். பிரிந்து கூடுதல் — அருமையிற் கூடினார் பின்பு ஒரு காரணத்தால் பிரிந்து அதன்பின் கூடுதல், ஊடிக் கூடுதல் — தலைமகன் மாட்டுத் தவறு கண்டு புலந்த தலைமகளைப் புலவி நீக்கிக் கூடுதல்,

இவ்விளக்கத்தின்படிக் காமத்துப்பால் கூடலைப் பற்றியே உரைக்கின்றது என்பது மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரின் கொள்கை என்பதை உணரலாம். பரிமேலழகர் இவற்றைப்பற்றி உரைக்க வில்லை,

தமிழ் நடையும் வடநூல் வழியும் :-

மேற் கூறிய மூன்று கூட்டங்களும் அவற்றின் நிமித்தங்களும் காமத்துப் பாலில் கூறப்படுவது தமிழ்நடை இல்லை என்பது பரிப்பெருமாள் கருத்து, அவர் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன ?

வள்ளுவர் தம் நூலை அகம் புறம் என்று வகைப்படுத்தி இருக்க வேண்டும். மாறாக அறம், பொருள், இன்பம் என்று வகைப்படுத்தி உள்ளார். எனவே, இது தமிழ் நடை இல்லை. வடநூல் வழி என அவர் விளக்குகின்றார்.

'தமிழ் நடையாயின் அகப்புறமென்று கூறுதல் வேண்டும், என்பது பரிப் பெருமாள் கூற்று.

இதில் 'அகப்புறம்' என்பது 'அகம் புறம், என்று இருத்தல் வேண்டும்.

இனி, இவர்பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான்'', எனப் பரிமேலழகரும் கூறி உள்ளார்.

அறம் பொருள் இன்பம் என்ற வரிசை வடநூல் வழியைப் பின்பிற்றியது என்பதில் இருவரும் ஒத்த கருத்துடையோராக உள்ளனர்அறம் பொருள் இன்பம் என்பது வடநூல் வழக்கு என்று கூறியதோடு பரிமேல் அழகர் அமைய. பரிப்பெருமாள் தமிழ் நடைப் படி அது எப்படி வகுக்கப்பட்டிருக்க வேண்டும்—அகம் புறம் என்று வகுக்கப்பட்டிருக்க வேண்டும் — என்பதையும் கூறுவது தெளிவைத் தருகின்றது.

காமத்துப்பால் இலக்கணம் :-

வடநூல் வழியைப் பின்பற்றியது ஆகையால் இதற்கு இலக்கணம் எங்குளது ?

'வாத்ச யாயனம் என்னும் காமதந்திரத்தில் சுரத் விகற்பம் என்ற அதிகாரத்தில் இதற்கு இலக்கணம் உள்ளது' எனப் பரிப்பெருமாள் உரைக்கின்றார். பரிமேலழகர் இதுபற்றிக் கூற வில்லை.

தமிழ்த் நடை:-

காமத்துப் பாலுள் கூறப்பட்டவற்றைத் தமிழ் நடையைப் பின் பற்றிக்கூறப்பட்டது என்று காட்டுதற்கும் இடம் உள்ளது. அப்படிக் கூறினாலும் இழுக்கு இல்லை என்பதை அடுத்து விளக்குகின்றார், பரிப்பெருமாள். இது சுவையாக உள்ளது;

காமத்துப் பாலில் கூறப்பட்ட செய்திகள் மூன்று. அவை புணர்தல், பிரிதல், ஊடல் என்பவை ஆகும்.

தொல்காப்பியர் திணைக்குரிப் பொருளாகப் புணர்தல், பிரிதல், ஊடல், இருத்தல், இரங்கல் என்று ஐந்து கூறி உள்ளார். இருந் தாலும் இரங்கலும் இதில் கூறப்படவில்லை.

இருத்தலும் இரங்கலும் பிரிந்துழி நிகழ்கின்றவை. எனவே, இவற்றைப் பிரிவினுள் அடக்கிப் புணர்தல், பிரிதல், ஊடல், என்ற மூன்றாகக் கூறி உள்ளார் என்று கொள்ளலாம். இவ்வாறு கொண்டால் காமத்துப்பால் தமிழ் நடையைப் பின்பற்றி எழுதப் பட்டது என்பதும், இதற்கு இலக்கணம் வடமொழி நூலில் காண வேண்டுவது இல்லை என்பதும் பரிப்பெருமாள் இறுதியாகக் கூறும் கருத்தாகும்,

புணர்தல், பிரிதல், ஊடல் என்ற மூன்று பிரிவுகள் காமத்துப் பாலுள் இருப்பதாகப் பரிப்பெருமாள் கூறவும், புணர்ச்சி பிரிவு என்ற இரு பிரிவுகள் உள்ளன எனப் பரிமேலழகர் கூறுகின்றார். இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஏனைப் பிரிவுகளை வடநூல் வழக்கை ஒட்டிப் பிரிவின்கண் அடக்கி உள்ளதாக இவர் கூறி உள்ளார்.

இவ்வாறு, புணர்தல், பிரிதல் ஊடல் என்ற மூன்று பிரிவுகளாக காமத்துப்பால் உணர்த்தப்பட்டு உள்ளது என்று பரிப்பெருமாள் கூறவும், புணர்ச்சி பிரிவு என்ற இரண்டாக உள்ளது எனப் பரிமேலழகர் கூறுகின்றார். மேலும் பிரிவினுள் இருத்தல் இரங்கல் என்ற இரண்டையும் அடக்கியதாகப் பரிப்பெருமாள் கூறவும், இருத்தல் இரங்கல் ஊடல் என்ற மூன்றையும் அடக்கியதாகப் பரிமேலழகர் கூறுகின்றார்.

அபிராமி சமயம்

K. சோமசுந்தரம், B.A., B.L., தஞ்சை.

(முன் தொடர்ச்சி துணர் - 53 மலர் - 11 பக்கம் - 176)

அபிராமி சமயத்துக்கு யாதொரு சமய போதனை வேண்டுவதில்லை. மனதைப்பற்றிய தெள்ளிய உள்ளறிவு வாய்ந்திருந்தால் சாலும். இதனில் தர்க்க வாதங்கட்டு இடமேயில்லை. குழந்தை உள்ளத்தால் இச்சமயத்தின் பயனை தியானத்தாலும் மோனத்தாலும் அறிவாலும் அன்பாலும் பக்தியாலும் சாதிக்க இயலும். இச்சமயம் மனத்தைக் கருவியாகக் கொண்டு அதனை முற்றும் தன் வயப்படுத்தி யோகத்தாலும் அன்புவகையாலும், பக்தி முகத்தாலும் துறவு உள்ளத்தாலும் பயன்படும் மெய்ந்நெறியினை வலியுறுத்தும். இத்தகையவாறு மனத்தை ஒருமுகப்படுத்தி அதனைத் தாண்டி நிற்றற்கு ஆகம நிகம நூல்களை மிக வலிந்து பயிலல் வேண்டாம்; இரேசக, பூரக, கும்பப் பயிற்சிகள் தேவையில்லை; உடலை ஒறுத்தல் வேண்டாம்; புலன்களை சிதைத்தலும் வேண்டுவதில்லை; உயிர் நாடி உய்வுதற்குரிய உறுப்புகளை வலிந்து ஒடுக்கவும் வேண்டாம்

‘ கனலினஞ் ஊசியின்மேல் காலை ஊன்றிப்
பொறிபற மெய் உணவின்றி உறக்கமின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்பட’ நிற்க வேண்டிய அவசியமுமின்று.

ஏனெனில் அபிராமி சமயம் புன்மைப் புலன்களின் போக்கிலே திரியும் வன்மை மனதைக் காத்து. யாக்கையின் முழுவதும் வாழக்கைத் தேனமுதை நிரப்பித் தேக்கி வாழச் செய்யும் வகையினை விளக்கும் பான்மைத்து.

அபிராமி சமயம் ஆத்மானுபவம் பெற இறைவியின் எண்ணுக் கடங்கா ஆற்றல்களையும் இனிது பரப்பி உணர்த்த வல்லது; பசுவின் செயலைப் பணித்து பாசமொழிக்க பயனைக் கூறி அறிவுறுத்துவது; பாச அன்றெப இறைவியின அன்பாக்கி மனத்தையும் புறத்தே போக விடாது. அகத்தேயிழுத்து உள்விழிப்போடு தியான உறவுடன் உலகமுறங்கும் நள்ளிரவில் (‘யாமம் வயிரவரேத்தும் பொழுது எமக்கென்று வைத்த’ — 73) நிலைநிறுத்தினால். முக்குணவுலகில நிலவும் நிர்க்குணமாகிய இறைவியைக் கண்டு பேரானந்தச் செழிப்பினை எய்துவிக்கவல்லது. இறுமாக்கும் ‘நான்’ எனும் ஆணவ மலத்தினை அணுவணுவாக நலியச் செய்து, இறைவி நம்முள்ளத்தில் எழுந்து தோன்றும் வகையினை உணர்த்துவது. இறைவிபால் உண்மையாய அன்பு உதிக்கவே ‘நீயே நான் என்ற நினைப்பும் மறப்பும் அறத்தாயே அனைய அருள் தந்தாய் பராபரமே’ என

இன்பத் துடிப்புணர்வு பெருகும். அன்பு கனிந்த இறைவியின் அருளும் தானாகவே விளங்கும். எனவே பக்தி மேலீட்டின் தெளிவில் உள்ளம் நெகிழ்ந்து மகிழ்ச்சியுறுதல், கண்களில் நீர் சுரந்து கண்ணிமைகள் சோர்ந்து குவிதல். மேனி சிலிர்த்தல். மெய் தன் வயம் அழிதல் ஆகியவைகளையே அபிராமி சமயம் தன்னியல்பாகக் கொண்டுள்ளது.

'விரும்பித்தொழு மடியார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற்களித்து மொழிதடுமாறி முன்சொன்ன எல்லாம்
தரும்பித்த ராவரென்றால் அபிராமி சமய நன்றே — (94)

இத்தகைய மெய்ப்பாட்டு நிகழ்ச்சிகளின்வழி பிராண வாயு உடலுக்குரிய கனல் ஆகியவற்றின் சேர்க்கையால் இயங்க, பிரணவநாதம் தன்னியல்பாய் எழுகிறது. எழுந்த பிரணவநாதம் நற்பயன்களை எளிதேயளிக்கும் வகையில் ஏழிசைகளாகப் பரிவுடன் பெருக. பக்திக் கனிவுடன் இசைந்திடும் ஞானவுணர்வில் யோகப் பலனையும் அமைவுற அளித்து மனத்தையும் வளம்படச் செய்யவல்லதாய் அபிராமி சமயம் திகழ்கிறது. எனவேதான் மனத்தையும் கடந்து நிற்கின்ற உண்மைப் பேரொளியாகிய அம்மையிடமிருந்து அருளாகிய அழகு, வெள்ளம் போல் அலர்ந்து எழுவதை அபிராமி சமயம் உருக்கொடுத்து, மக்களுக்கு அமர வாழ்வை நல்கும் நயனுடைய தென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இயற்கையின்பால் உள்ளுறையாக இயங்கும் இறைமையில், உலகினை ஒப்பிப் பண்படுத்தும் பொறுப்பும் வாய்ந்து உயிர்கட்கு அறியும் அறிவு தந்து நலஞ்செய்யும் பெண்மைச் சக்தி பேரழகு கொண்டு தெய்வக் காட்சியுடன் பொலியும் (71). இஃது உயிர்க்குயிராய் மன்னி நிலவும் தாய்மைத் தன்மையினைக் கொண்டு ஞான விளக்கத்தினையும் திருவருட்பேற்றினையும். பாச நாசத்தையும் அளிக்கும் பெற்றிமையினையுடையது. இவ்வாறு உலகெலாமாகி வேருகியும் உடனுமாய் படைப்புத்தொழிலைத் தானே மேற்கொண்டு இடைவிடாது ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் அழியா அழகில் உறைகின்ற உண்மையுரு அபிராமி அம்மையாகும். அழகினால்தான் உலகு வளர்ச்சியெய்துகின்றதென்பது அறிஞர் கூற்று. இறையுண்மையினை அழகின்கண் காணப்பெறுவதால், அழகின்வழி அவ்வுண்மையினை உணரப் பெறுதல் இன்றியமையாததென்பதை வற்புறுத்துவது அபிராமி சமயமாகும். அழகினை ஊனக் கண்ணாலல்லாது மனக்கண்ணால் காணுங்கால் அழகுத் தெய்வம் சிறந்து பொலிவுறும். அவ்வழகில் ஈடுபாடுடைய முழுமனம் மட்டற்ற மகிழ்ச்சி

வாய்ந்து உணர்ச்சி பாவனையால் ஆற்றல் கொண்டு தன்னகத்தே அத்தெய்வ அழகு உருவினை நிலையாக அமைந்துக்கொள்ளுகிறது. பின்னர் மனம் உறுதியுடன் தன் உண்மைச் செயல்கள் மூலம், அத்தெய்வ அழகில் பிணைந்து வழிபட்டு நிற்க, ஆன்ம பக்தி மேலிட்டால் விளங்கும் வழிபாட்டியலில் முதிர்ந்து திகழ்கிறது. இத்துடன், வீறு கொள் இசையும் உறவாடும் உவகைத் தொடர்பினைப் பெறவே, அவ்விசையே இயற்கையாய ஓசை ஒலியெலாம் ஆகி நிற்கும் அழகுத் தெய்வத்திற்கு நாத வடிவு அளித்து அழகுத் தெய்வத்தை ஏழிசையாகவும் 'இசை வடிவாய் நின்ற நாயகியே' (49) என்பர் அபிராமி பட்டர்.

'தளர்வறியா மனம்' (69) நிறைவு பெறுதலுக்கு, இத்தகைய இசை ஞானத்துடன் கூடிய பக்தி நெறியினை உணர்த்துவது அபிராமி சமயமாகும். வெறும் ஞானமட்டும் சாரமற்ற தன்மையது. அதன் வழி சிந்தித்து ஓர்தல் முதலாய தொழிலால் இறைவியை அணுகுதல் இயலாது. அதன்கண் கவலையொடு ஆய்வு செய்து தெளிதல் முயற்கொம்பு. அவ்வாறும் செய்யமுற்படுவது, ஆன்மா பக்குவமாகாததற்கு அறிகுறியாகும். பக்தியோ சாரம் நிறைந்திருந்தும், அது விவேக மாகிய விழியில்லாததாகும். மெய்வகையறிந்து பேரன்பு பாராட்டும் விவேக பக்தியால் ஞானம் உதிக்கும்; அஞ்ஞானம் அகலும்; பந்தக் கட்டும் நீங்கும் இவ்வாறு பக்தி நெறியில் இறைவியை அனுபூதி வாயிலாக கண்டுணர்ந்து அன்பு வடிவாக அதனோடு ஒன்றித்து மோனமெனும் பக்தி ஞான வரம்பினை எய்துதலே மக்களுயிர்களுக்கு ஆன்ற உறுதி பயப்பதாகும். இவ்வுறுதியின் வழி ஆன்ம லப்பினை மாசற்ற மனது அடையப்பெற்றால், உடலும் பொன்னாகி மிளிர, உயிருக்கும் அணுக்களாய் இறைவி அழகுற எளிவந்து காட்சியளிக்கு மென்பது அபிராமி சமயத்தின் முடிந்த முடிபு. எனவே உள்ளத்தை ஈர்க்கும் இசை வழி, இறைவியை நம் மனக்கண்முன் அறிவு [ஞானம்] வகையில் தோன்றச் செய்து, பக்தி [பேரன்பு] உணர்வால் இறையின்பத்தை அனுபவித்து மகிழ வைப்பது அச்சமயத்தின் உள்ளார்ந்த நோக்கமாகுமென்பது பெற்றும்.

ஒலியின்பத்தில் உள்ளம் ஒன்றி இதய பாவத்துடன் இறைவியை வணங்க முற்பட்டால், உள்ளம் உவகை பூப்ப மெய்ம்மறந்து இறைவிபால் உண்மையாய் அழகுபட ஈடுபடுதலை உய்த்துணரலாமேயன்றி, அதற்கு முறையாய விளக்கம் தருவது ஏலாது. எனவே புறத்தே சென்றுலவும் இயல்புடைய மனத்தை இறையின்பத்தில் தோய வைக்க இசையின் ஓசையும் பக்தி ஞானத்துணர்வும் இன்றியமையாததாகும். தளர்வறியா மனதிற்கு ஆற்றலை அளிக்க வல்லது இசைக்கலையேயாகும். இசையென்பது எழுத்தொலியை

அடியாகக்கொண்டு பண்ணுக்குக் காரணமாயுள்ள ஓசையாகும். பாவோடணைதல் இசையெனப்படும், நுண்மையும் மென்மையும் வாய்ந்த இசை, உள்ளத்தைத் தன்வயப்படுத்தும் தனிப் பேராற்றலை யுடையது, உணர்வுடைய உயிரினங்களுக்கே பலப்பல நிகழ்ச்சிகளை எழுப்பிக்கொண்டு பயன் சுரக்கும் இசை. மொட்டுகளையும் நெகிழச் செய்யும் நறுங்குறிப்பு 'புதலும் வரி வண்டூத வாய் நெகிழ்ந்தனவே' எனும் குறுந்தொகையடியால் புலனாகின்றது. இசை, இசைப்பவரது உள்ளத்தை தூய்மையாக்கும்போதே அவரைத் தம்மை மறக்கும் தூய்மையினைப் பெறச்செய்து, தெய்வீக உண்மை அழகினைப் புல னாக்கும் வாய்ப்பினை அளித்து விடுகின்றது. மற்றும் மெய்யினின்றும் பிறக்கும் நாதங்கள் செவிக்கும் சிந்தைக்கும் இனியதாய் இயங்கி அற்புதமாய் ஓங்காரத்தின் உருவங்களாக அமைந்து திகழ ஆரம் பித்து விடுகின்றன, இத்தகைய உருவங்களை சக்தி

'நாயகி, நான்முகி நாரணிகை நளின பஞ்ச
சாயகி சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி சூலினி, மாதங்கி'. (50)

என தன்னுடைய வடிவங்களாகக் கொண்டு பலதிறப்பட்ட அடி யார்களுக்கு எளிதே காட்சியளிக்கிறது. எனினும் அபிராமிபட்டர் பொதுவாக அம்மையை நைவளம் மிகுந்த நறுந்தண் சாயல் கொண்ட நங்கையாகப் பாவிப்பது உணரத்தக்கது. இயற்கையின் ஓசையில் இன்பம் பயக்கும் இசையை இறைவியாகக்கொண்டு, உயிரினங்கள் அவ்விசை வழி தெய்வவுணர்வால் உந்தப்படும் வகை யின் இயல்பும் ஓரோவழி கண்டுணரப்படும்.

(தொடரும்)

அழனும் — புழனும்.

ஏ. ஆதித்தன்.
காமராசர் பல்கலைக் கழகம்.

தொல்காப்பியனார் அஃறிணைக்கண் மகர வீற்று மொழிகளோடு மயங்காத னகர வீற்றுமொழிகள் ஒன்பது என்று குறிக்கின்றார்.

'மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃதென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன

(தொல்காப்பியம்—மொழிமரபு: 49)

தொல்காப்பியனார் மகர வீற்று மொழிகளோடு மயங்காத னகரவீற்றுச் சொற்கள் ஒன்பதனையும் எவை எவை என்று சுட்டவில்லை. உரையாசிரியர்கள் இத்தகைய சொற்களாக ஒன்பதனைத் தருகின்றனர். அவை உகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என்பவனவாகும்.[1] நச்சினார்க்கினியர் 'உகின்' எனும் சொல்லிற்குப் பதிலாக 'எகின்' என்னும் சொல்லைக் குறிக்கின்றார்.[2]

உரையாசிரியர்கள் தரும் ஒன்பது சொற்களில் எகின் (தொல். எழுத்து: 336). அழன் (தொல். எழுத்து: 193). புழன் (தொல். எழுத்து: 193). குயின் (தொல். எழுத்து: 335) எனும் நான்கு சொற்கள் தொல்காப்பியர் மொழியிலே காணப்படுகின்றன. உரையாசிரியர்கள் கூறும் இந்த ஒன்பது சொற்களில் 'அழன்' 'புழன்' ஆயிரு சொற்களையும் மகர வீற்றோடு உறழாத னகர வீற்றுச் சொற்களுக்குச் சான்றாகக் கூறுவது முறையாகுமா என்பதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியனார் உருபியலில் மகர வீற்றுப் பெயர்கள் வேற்றுமை உருபேற்குங்கால் 'அத்து'ச் சாரியை ஏற்றுவரும் எனக் கூறுகின்றார்.

'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' (தொல்காப்பியம்-உருபியல்: 13) இதற்கு அடுத்த நூற்பாவில் மகரவீற்றுப் பெயர்கள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றார்.

---

† இக்கட்டுரை எழுத எனக்குப் பல்லாற்றானும் உதவி புரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர். மோ. இசரயேல் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக.

'இன்னிடை வருஉம் மொழிமாருளவே' (தொல்காப்பியம்-உருபியல் : 14) உரையாசிரியர்கள் இந்நூற்பாவிற்கு மகரவீற்றுச் சொற்களுள் சில 'அத்தே' யன்றி 'இன்' சாரியை இடையே வந்து முடிதலும் உண்டு என உரை எழுதி 'உருமினை' 'உருமினொடு' போன்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர்,[3] இலக்கிய வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு சிற்சில மகர வீற்றுப் பெயர்கள் அத்துச் சாரியைக்கும் வேற்றுமை உருபிற்கும் இடையே இன்சாரியையும் பெற்று வருதலும் உண்டு எனக் கூறிப் 'புலத்திற்கு' (புலம்-அத்து-இன்-கு) போன்ற எடுத்துக்காட்டினைக் கூறுபவர்களும் உண்டு (4) மேற்கூறப்பட்ட இருவகை விளக்கங்களும் பொருத்தமுடையனவாகவே தென்படுகின்றன.

கீழ்க்கணக்கு இலக்கியங்களில் மகர வீற்றுப் பெயர்கள் சில அத்துச் சாரியை பெரு நிலையினையும் காணமுடிகின்றது (5)

துன்பக்கு (துன்பம்+கு) — நாலடியார் : 280 : 3
வையக்கு (வையம்+கு) — குறள் : 701 : 2

இன்னமும் லகர வீற்றுப் பெயர் அத்துச் சாரியை ஏற்று வருதலையும் கீழ்க்கணக்கில் ஒன்ருகிய நாலடியாரில் காணமுடிகின்றது. (6)

கடலத்துள் (கடல் + அத்து + உள்) — நாலடியார் : 272 : 4

தொல்காப்பியனார் னகர வீற்றுப் பெயர்கள் சாரியை ஏற்கும் நிலையினைச் சுட்டும்போது 'அழன்' 'புழன்' என்ற இரு சொற்கள் சாரியை ஏற்கும் நிலையினைக் குறிக்கின்ருர்.

அழனே புழனே ஆயிருமொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத்தோன்றல்
ஒத்த தென்ப உணருமோரே
[தொல்காப்பியம் : உருபியல் : 21 [

'அழன்' 'புழன்' என்னும் இருசொற்களும் 'அத்து' 'இன்' ஆகிய இரு சாரியைகளையும் ஏற்று உறழ்ந்து வரும் எனத் தொல்காப்பியர் சுட்டுகின்ருர்.

[எ.டு]

அழத்தை (7)
அழனினை
புழத்தை
புழனினை

அழன் + இன் + ஐ > அழனினை
புழன் + இன் + ஐ > புழனினை

'இன்' சாரியை ஏற்குங்கால் 'அழன்' 'புழன்' என்னும் இரு சொற்களையும் மீட்டுருவாக்கம் செய்ய முடியும்.

அழம் + அத்து + ஐ > அழத்தை
புழம் + அத்து + ஐ > புழத்தை

'அத்து'ச் சாரியை ஏற்கும் நிலையில் 'அழம்' 'புழம்' என்ற இரு சொற்களைத்தான் மீட்டுருவாக்கம் செய்ய முடியுமே தவிர 'அழன்' 'புழன்' என்ற இரு சொற்களையும் மீட்டுருவாக்கம் செய்ய முடியாது. ஏனெனில் தமிழ் மொழியமைப்பும் தொல்காப்பிய விதியும் இதற்கு இடம் தருவதில்லை. இதன் வாயிலாக 'அழம்' அழன்' என்ற இரு சொற்களும் 'புழம்' 'புழன்' என்ற சொற்களும் உறழ்ச்சியில் [free variation] வரும் என்பது புலனாகின்றது.

தொல்காப்பியனார், மேற்கூறப்பட்ட நூற்பாவில் உறழ்ச்சியில் வரும் இவ்விரு சொற்களும் மகரவீற்றில் வரும்போது 'அத்து'ச் சாரியை பெற்றுவரும் என்பதனையும். னகர வீற்றில் வரும்போது 'இன்' சாரியை பெற்று வரும் என்பதனையுமே குறிப்பாகக் கூறுகின்றார் எனலாம்.

மேற்கூறிய செய்திகளிலிருந்து 'அழன்' 'அழம்' என்றும் 'புழன்' 'புழம்' என்றும் உறழ்ந்து வரும் என்பது தெளிவாகின்றது. இவ்வாறாயின் னகர மகர உறழ்ச்சியில் வரும் இவ்விரு அஃறிணைப் பெயர்களை 'மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த னகரத் தொடர்மொழிக்கு'ச் சான்றாகக் கூறுதல் தவறானது. எனவே மகர வீற்றோடு உறழ்வின்றி வரும் னகர வீற்றுச் சொற்களுக்கு உரையாசிரியர்கள் தரும் ஒன்பது சொற்களில் 'அழன்' 'புழன்' என்ற இரு சொற்களும் முறையான சான்றுகளாக அமைதல் இல்லை என்பது தெளிவு.

குறிப்புகள்

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை : நூற்பா : 82.
2. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரை : நூற்பா : 82.
3. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரை : நூற்பா : 186.
4. நடராசன், 'இன்னிடை வரூஉம் மொழிமாருளவே' ஆய்வுக் கோவை : 9 தொகுதி : 2 [1977], பக். 195 - 198.
5. ஆதித்தன் , தொல்காப்பிய இலக்கணமும் பதினெண்கீழ்க் கணக்கு மொழியும், முனைவர் ஆய்வேடு, காமராசர் பல்கலைக் கழகம். [1977], ப. 134.
6. மேலது, ப. 135.
7. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரை : நூற்பா : 193.

குற்றியலுகரம்

பேராசிரியர் ச. பாலசுந்தரம் க. பு. கலலூரி

துணர் 53 மலர் 16 ஆம் பக்கத் தொடர்ச்சி

சார்பெழுத்துக்கள் உயிருமாகாது மெய்யுமாகாது இரண்டற்கும் பொதுவாய் மொழிக்கண் அவற்றைச் சார்ந்து தோன்றுதலின் "சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடை எழுத்து" முப்பஃதென்றும்.. அகரமுதல் னகர இறுவாயாய எழுத்துக்களைப் போலவே இவையும் ஒலியனுக அமைந்து பொருளை வேறுபடுத்தலின் "அவற்றேரன்ன" என்றும், ஆசிரியர் தெளியக் கூறியுள்ளமையால் இவை பொருள் நோக்கியும் இடம் நோக்கியும் உயிராகவும் மெய்யாகவும் நின்று சொற்பொருளை விளக்கும் என்க.

ஆகவே இக்குற்றியலுகரம் தனிமொழியாகி நிற்றற்கண் பொருளை நோக்கியும், தொடர்மொழிக்கண் பொருளையும் இடத்தையும் நோக்கியும், செய்யுளின்கண் சீரளவை நோக்கியும் உயிராகவோ ஒற்ருகவோ தெளிய நிற்கும்.

அஃதாவது பொதுத்தன்மை நீங்கி மெய், உயிர் ஆயவற்றுள் ஒன்றன் இயல்பினைக் கொண்டு நிற்கும். அஃதெவ்வாறெனின் ? திணையிரண்டேயாகவும் பெயர் வினைகளைப் பாகுபடுத்துங்கால் உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் உய திணை வினை, அஃறிணை வினை, பொதுவினை எனமூன்ருக பகுத்து அவைதாம் சார்ந்துவரும் சிறப்புப்பெயர் வினைகளசன் பொதுத் தன்மை நீங்கி இரு திணைகளுள் ஒன்றற்குரித்தாகி வரும் எனக் கொள்ள வைத்தது போல என்க.

எனவே. இக்குற்றியலுகரம் உயிராக நிற்குமிடம் யாது ? மெய்யாக நிற்குமிடம் யாது எனின் ? தனிமொழிகள் யாவற்றிலும் உயிர்த்தன்மை பெற்றே நிற்கும்- இஃது உயிர்த்தன்மை கொண்டு நிற்பதனை நாகு, ஆடு, ஐது முதலியவற்றை ஈரெழுத்து மொழி என்றும், வரகு முரசு முதலாயவற்றைத் தொடர்மொழி என்றும் ஆசிரியர் கூறுவதால் அறியலாம்.

புணர்மொழிகளுள் (தொடர்மொழியில்) வருமொழி உயிராயின் மெய்த்தன்மை பெற்று மெய்யீருகி, வருமொழி உயிரேற இடந்தந்து உயிர்மெய்யைப் போல் தன் தன்மை கெடாது தன்பொருள் தோன்ற இணைந்து நிற்கும் : இதனை, ஆசிரியர்

" மூன்றுதலையிட்ட முப்பத்திற்றெழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலா கிருபஃது
அறுநான் கீற்றெடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்ருயீரியல " (எழுத் —103) என்றும்

" மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் " (எழுத்-104)
என்றும் கூறிப்பின்னர்

" குற்றியலுகாமும் அற்றென மொழிப " (எழுத் - 1ᴗ5)
என மாட்டெறிந்து கூறியுள்ளமையால் அறியலாம். செய்கைப் படுங்கால் நிலைமொழியாக நிற்கும் மெய்யீற்றின் முன் வரும் உயிர் கள் தனித்து நில்லாமல் அதனை மாற்றி அதனோடு பொருந்துவதை

" புள்ளியீற்றுமுன் உயிர் தனித்தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே " (எழு-138)

என விதித்தமையான் முன்னர் மாட்டேறுவகையால் புள்ளிபெற்று நிற்கும் (மெய்த்தன்மை கொண்ட) என்ற குற்றியலுகரத்தின் முன்னரும் வருமொழி உயிர் ஏறிச் சிவணி நிற்கும் எனத் தெளிவு படுத்தியுள்ளமையால் அறியலாம்.

இனி இப்புணர்மொழிக்கண் உயிர்க்கணமல்லாத ஏனைக் கணங் கள் வருமொழியாக வரின் உயிர்த்தன்மைகொண்டு அதற்கேற்ற செய்கை பெற்று நிற்கும். இதனை ஆசிரியர்

" ஈரெழுத்து மொழியும் உயிர்த் தொடர் மொழியும்
வேற்றுமையாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி " (எழு - 411)

" ஒற்றிடை இனமிகா மொழியுமாருளவே
அத்திறத்தில்லை வல்லெழுத்து மிகலே " (எழு - 412)

" இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடையாமியல என்மனார் புலவர் " (எழு - 413)

" வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே "

" மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம்
வல்லொற்றிறுதி கிளையொற்றாகும் (எழு - 414)

எனவரும் நூற்பாக்களால் தெளியவைத்துள்ளமையால் அறியலாம்.

செய்யுளகத்து வருங்காலும் இதன் புணர்ச்சியியல்பு மேற்கூறிய வாறேயாம். அசையொடு சார்ந்து சீராகி நிற்குங்கால் சீர்வகை யடியாயின் அலகு பெற்றும் கட்டளையடியாயின் அலகுபெறாதும் வரும். அதனை ஆசிரியர்

இருவகை உகரமோ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகுமென்ப (செய் - 4)

" குற்றியலுகரமும் முற்றியலுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே " (செய் -)

எனவும்

" உயிரில் எழுத்தும் எண்ணப்படா அ
உயிர்த்திறம் இயக்கம் இன்மையான " (செய்-43)

எனவும் கூறுமாற்ருன் உணரலாம்.

இதுகாறுங் கூறிய வாற்ருன் குற்றியலுகர ஈறு உயிர்வரின் மெய்யைப் போல அவ்வுயிர் தன்மேற் பொருந்த இணைந்து தான் கெடாதே நிற்கும் என்பதும், ஏனைக் கணம் வரின் உயிர்போல நிற்கும் என்பதும் பெறப்படும்.

முற்றியலுகர ஈறு உயிர் முதன் மொழிவரின் பொதுவாக உடம்படு மெய் பெற்றும், உடம்படு மெய் பெருதவழித் தான் கெட்டும் நிற்கும். கெட்ட விடத்து நின்ற மெய்யின்கண் வருமொழி உயிர் ஏறும். இவ்வியல்பினை

" எல்லா மொழிக்கும் உயிர் வருவழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார் " (எழு-140)

எனவும்,

[எல்லா மொழியும் என்றது உயிரும் மெய்யுமாகிய முதலெழுத்துக் களால் ஆன மொழிகளை]

" சுட்டுதல் உகரம் அன்னெடுசிவணி
ஒட்டிய மெய்யொழித்து உகரங்கெடுமே " (எழு-176)

" அன்று வருகாலை ஆவாகுதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள்மருங்கின் உரித்தெனமொழிப "

(எழு-258)

எனவும்வரும் நூற்பாக்களால் தெளியலாம்.

முற்றியலுகர ஈறு வருமொழி உயிர் வரின் கெடும் என விதந்து கூறியவாறு குற்றியலுகரம் கெடும் என்று ஆசிரியர் யாண்டும் கூறிற்றிலர். ஆதலின் அஃது கெடாது இயல்பாகவே நின்று புணரும் என்பதனை

" குற்றியலுகரக்கு இன்னே சாரியை "

" யாதென் இறுதியும் சுட்டுமுதலாகிய
ஆய்தவிறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தங்கெடுதல் ஆவயினுன "

" ஒன்பானிறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே " (எழு-454)

"நூறுமுன்வரினும் கூறிய இயல்பே" (எழு 46)
எனவரும் நூற்பாக்களால் நன்கறியலாம்,

அவ்வாருயின்

"ஒன்றுமுதலாக எட்டனிறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்ற இன் வரூஉம் இரண்டலங் கடையே"

"எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வரும்வழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றியலுகரம் முற்றத் தோன்ருது"

எனவரும் நூற்பாக்களுள் குற்றியலுகரம் கெடும் எனக் கூறியது பொருந்துமோ? எனின் கூறுதும். ஆண்டுக் குற்றியலுகரம் மட்டும் கெடுமெனின் இவ்வாறு கூறியிரார் ஆசிரியர். பத்து என்னும் எண்ணின்கண் உள்ள தகர ஒற்றுக் கெடுதலான் உகரம் நிற்குமோ நிற்காதோ என ஐயம் தோன்றுமாதலின் இரண்டும் கெடும் என்ருர். இவ்வாறே அக்குச்சாரியையுள் அகரம் நிற்க ஏனையவெல்லாம் கெடுதலின் அக்கின் இறுதிமெய் மிசையொடும் கெடுமே குற்றிய லுகரம் முற்றத் தோன்ருது என்ருர், என்க.

மற்று

"ஆறன் மருங்கிற் குற்றியலுகரம்
ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்" என்றும்,

"நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனவொற்றுமிகுமே" என்றும்,

குற்றியலுகரத்திற்கு மட்டும் கேடு கூறியுள்ளமை முரணுகும் எனின்? கூறுவல்;

ஒன்று முதலாய எண்ணுப்பெயர்களுள் ஏழ் என்னும் பெயர் தவிரப் பிறயாவும் குற்றியலுகரச் சொற்களாகும். அவை பற்றிய விதிகளைத் தொகுத்தும் வகுத்துங் கூற முற்பட்ட ஆசிரியர்

"ஒன்றுமுதல் ஒன்பான் இறுதிமுன்னர்
நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்
வந்து இடைநிலையும் இயற்கைத் தென்ப"

"கூறிய இயற்கை குற்றியலுகரம்
ஆறன் இறுதி அல்வழியான (எழு-437)

என்னும் நூற்பாக்களால் ஒன்றுமுதலாகிய எண்ணுப் பெயர் மூன் பத்து என்னும் எண் வந்து புணருங்கால். ஒன்று முதலாய எண்ணுப் பெயர்களின் இறுதிக் குற்றியலுகரம் மெய்யொடுங்கெட்டு ஒருபஃது இருபஃது முப்பஃது அறுபஃது எனப்புணரும் என்பது தெளிவாகின் றது. அவ்வழி ஆறு என்னும் எண்ணுப் பெயர் ஈறு கெடாது அறுபஃது எனப் புணரும் ஆகலின் ஆறன் இறுதி அவ்வழியான எனவிதித்தார். இச் சொல்லின் ஈறுகெடாதது மட்டுமன்றி மற்றைய சில எண்ணுப்பெயர்கட்கு மாறாக முதல் குறைந்து புணரும் என்பதனை

"மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்"

என விதந்துரைத்தார். பின்னர் இவ் எண்ணுப்பெயர் பிற அளவுப் பெயர்களோடு புணருங்கால் மீண்டும் பழைய நிலையிலே நிற்றலை நோக்கி மூன்றென்னும் எண்ணுப் பெயரை விலக்கி

"ஆறென் கிளவி முதல் நீடும்மே" என்றார்.

பின்னர் இது நூறென்னும் எண்ணுப் பெயரோடு புணருங்காலை முன்னர்ப்பத்து வருங்கால் எய்திய நிலையையே பெற்று அறுநூறு எனப் புணர்தலின

"நூறு முன்வரினும் கூறிய இயல்பே" என

மாட்டெறிந்தார். இவ்வாறு எண்ணுப் பெயர் வருங்கால் இது முற்றியலுகர நிலையும், ஏனை அளவுப் பெயர் வருங்கால் குற்றிய லுகர நிலையும் பெற்று நிற்றலால் ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் புணரும்வழி பத்தும் நூறும் புணர்ந்தாங்கே புணரும் என்பதுபட நின்ற அதிகாரத்தை விலக்கி ஈறுகெடும் என விதிப்பாராய்

"ஆறன் மருங்கிற் குற்றியலுகரம்
ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்." என்றார் என

அறிக. இவ்வாறு விதந்து கூறிய தெற்றுக்கோ எனின்; பத்தும் நூறும் புணருங்கால் நெடுமுதல் குறுகியது போல ஆயிரம் புணருங் கால் குறுகாது என்பதை உணர்த்துதற் பொருட்டேயாம்,

எவ்வாறெனின்? ஆறு என்பது அதிகாரத்தால் அறு எனக் குறுகின் அது முற்றியலுகரமாதலன்றி குற்றியலுகரமாகாது. ஆயிரம் புணருங்கால் அதிகாரத்தால் எய்திய நெடுமுதல் குறுகாமல் நெடிலாயே நிற்கும் என்பது புலப்பட "ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்" எனத் தன் சதுரப்பாடு தோன்ற உரைத்தார் என்க. அவ்வாறாயின் ஆறு என்பது குற்றியலுகரமேயாதலின் உயிர்வரின் ஏறிப்புணர்நிற்றல் இயல்பாதலின் ஈறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும் எனக் கூறியது சாலாதெனின்? அற்றன்று.

"ஒன்று முதலொன்பான் இறுதி முன்னர்" என்னும்

நூற்பாவின் கண்

"கூறிய இயற்கை குற்றியலுகரம் என்றது ஒன்று முதலாய எண்களின் இறுதிக் குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுதற்கு அந் நூற்பா மாட்டேற்று விதியாகும், அதனை ஆறன் மருங்கிற் குற்றியலுகரமும் மாட்டேற்றான் மெய்யொடுங் கெடும் என நின்ற விதியை விலக்குவான் வேண்டி ஈறு, மெய்யொழியக் கெடுதல் வேண்டும் என்றார் என்க.

இந்நுட்பத்தை ஓராத உரையாசிரியரை உள்ளிட்ட அனைவரும் திரிந்ததன் திரிபுஅது வென்னும் நயத்தால் அறு என நின்ற உகரத்தைக் குற்றியலுகர மென ஓதினர் என்றும் — உயிர்வரும் வழிக் குற்றியலுகரம் கெடும் என்பது இதனானே பெறப்படும் என்றும், தத்தமக்குத் தோன்றிய வாறெல்லாம் கூறி, இருவகை வழக்கிலும் காணப் பெறாத "அறுயிரம்" என்பதனை எடுத்துக் காட்டாக அமைத்துச் செஞ்சொல்லாகிய ஆறுயிரம் என்பதை இலேசினாற் கொண்டுரைத்தனர். உரையாளர் ஒவ்வொருவரும் இவ்வாறு கயிற்றரவாட்டியுள்ள இடங்கள் மேலும் பல உள; அவற்றை மொழியறிஞர்கள் நடுவுநிலையோடு ஆய்ந்து உண்மை காண்பார்களாக!

அடுத்து

"நூறென் கிளவி ஒன்று முதல் ஒன்பாற்கு
ஈறுசினை ஒழிய இன ஒற்று மிகுமே" என்பதைக்

காண்போம்.

இந்நூற்பாவில் ஈறுசினை 'ஒழியாது' என்றிருந்த பாடத்தை ஏடெழுதுவோர் 'ஒழிய' என்று எழுதியமைத்த வடிவத்தை உண்மைப் பாடம் எனக் கொண்டு நச்சினார்க்கினியர் முதல் இற்றை வரை உள்ள ஆசிரியன்மார் யாவரும் உரைகண்டுள்ளனர். உரையாசிரியர் உரை வரைந்த காலத்தில் 'ஒழியாது' என்ற பாடமே இருந்திருத்தல் வேண்டுமென்பது அவர் உரையால் புலனாகின்றது அஃதாவது.

இத்தொடருக்கு அவர் எழுதியுள்ள உரைப்பகுதி "ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரமேறிய மெய்யாய சினையும் கெடாது நிற்ப சினைக்கு இனமாகிய ஒற்றுமிக்கு முடியும்" என்பதாகும், மேலும் இவர் "பனையும் அரையும்" (எழுத்—284) என்னும் நூற்பாவில் வரும்.

"மெய்யவண் ஒழிய என்மனார் புலவர்" என்னுமிடத்தும்
அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும் (எழு—316)

என்னுமிடத்தும், இவ்வாறே வரும் எழுத்ததிகார 176, 347, 350ஆம் நூற்பாக்களிடத்தும் வேறு சொல்லாற் பொருள் விளக்காமல் ஒழித்து—ஒழிய என்னும் அவ்வச் சொற்களையே உரையாக எழுதிச் சென்றுள்ளார். 359 ஆம் நூற்பாவில் மட்டும் ஒழிய என்பதற்குக் "கெடாது நிற்ப" எனப் பொருள் எழுதியுள்ளார். இம்மாற்றம் ஏடெழுதியோர் நச்சர் உரையைப் பயின்றதன் விளைவென்று கொள்ளுதற்கு வாய்புள்ளது. நிற்க. நச்சினார்க்கினியர் 176 ஆம் நூற்பாவில் ஒழித்து என்பதற்கு நிறுத்தி என்றும், 350 ஆம் நூற்பாவில் ஒழித்து என்பதற்கு நிற்ப என்றும், ஏனைய இடங்களில் ஒழிய என்பதற்கு நிற்ப என்றும் பொருள் எழுதியுள்ளார். பின்னுரையாளர்களும் இரெட்டியாரும் நிற்ப என்னும் பொருளையே ஏற்று அமைதி கூறி விளக்கினர். உரையாசிரியர் உரையைச் செம்மை செய்து பதிப்பித்த திரு அடிகளாசிரியர் அவர்கள் ஒழிய என்பதற்கு நிற்ப என்பதும் பொருளெனக் கூறிச்

"சிறுமை நமக்கொழியச் சேட் சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்" (குறள் — 1231)

என்னும் குறட்பாவைச் சான்றாகக் காட்டியுள்ளார். எனினும் இவ்வுரையாசிரியர்கள் எழுத்ததிகாரத்துள் "உயர்திணையிடத்து ஒழியாது வருதலும்" "ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற்றியற்றே" என்னுமிடங்களிலும், சொல்லதிகாரத்துள்

"ஒரு பெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபு வேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்"

"மற்றையது என்னும் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித்தன்றே"

என்னுமிடங்களிலும் பொருளதிகாரத்துள்

"தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்"

"ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்"

"நொந்து தெளிவொழிப்பினும்"

"ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங்குரியர் முன்னத்தின் எடுத்தே"

என்னுமிடங்களிலும் ஒழிதல்—நீங்குதல் என்னும் பொருள்படவே எழுதியுள்ளார் பரிமேலழகரும்

" நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல் " என்னுமிடத்து நீக்கி விடுக என்றே

எழுதியுள்ளார். எனவே இச்சொல்லின் செம்பொருள் யாது, சார்புப் பொருள் யாதென ஆய்வாம்.

இந்நால்வருள் ஒருவர் ஒழிய மற்றவர் போருக்குச் சென்றனர் என்றால் சென்றவர் மூவர் செல்லாது நீங்கியவர் ஒருவர் என்பது பொருள். செல்லாது ஒழிந்தவர் என்ற கருத்தை நின்றவர் ஒருவர் எனத் தெளிவுப்படுத்தலாம். ஈண்டு ஒழிய என்பது செல்லுதலினின்றும் நீங்கியதென்பதேயாம் எனவே நீங்குதல் செம்பொருள் என்பதும் —நிற்றல் கருத்துப் பொருள் என்பதும் வெளிப்படை. இவ்வாறே

" சுட்டுமுதல் உகரம் அன்னொடுசிவணி
ஒட்டிய மெய்யொழித்து உகரங் கெடுமே " என்பதனுள்

உகரம் எழுவாய்; கெடும் பயனிலை.

கெடும் உகரம் என்ன செய்தது, ஒட்டிய மெய்யை ஒழித்துத்தான் (மட்டும்) கெட்டது. எனவே, கெடுதலினின்றும் மெய்யை நீக்கியது, கேட்டினின்றும் நீங்கியது மெய் எனவே மெய் கெடாது நின்றது என்பது கருத்து. ஆதலால் ஒழித்து என்பதற்குச் செம்பொருள் நீக்கி என்பதும் மறுதலைக் கருத்துப் பொருள் நிறுத்தி என்பதும் புலனாகும். இவ்வாறே

ஆறன் மருங்கிற் குற்றியலுகரம்
ஈறு மெய் ஒழியக் கெடுதல் வேண்டும். என்பதனுள் கெடுதல்

வேண்டியது ஈறு. மெய் கெடுதலினின்றும் நீங்க வேண்டி அவ்வீறு மட்டும் கெட்டது. கெடுதலினின்று நீங்கி மெய் கெடாது நின்றது என்பது கருத்து, எனவே ஈண்டும் ஒழிய என்பதற்கு நிற்ப என்பது கருத்துப் பொருளாயிற்று.

வாராதிரான் என்ற வழி வருவான் என்னும் பொருள் தருதல் போன்றும், உண்ணல் தவிரான் என்றவழி உண்பான் என்றும் பொருள் தருதல் போன்றும் வருவதொரு தொடர் இஃதென்பது புலனாம்.

இவ்வாறே ஏனைய நூற்பாக்களுள் வரும் ஒழிய என்பதற்கு நீங்க என்பதே சொற் பொருள் என்பதும் நிற்ப என்பது கருத்துப் பொருள் என்பதும் தெளிவாம்.

இனி

" நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்கு
ஈறு சினை ஒழியாது இன ஒற்று மிகுமே "

என்னும் நூற்பாவில் நூறு என்றும் சொல்லிடத்துள்ள ஈறு சினை என்பதும், இன ஒற்று என்பதும் எழுவாயாய் முறையே ஒழியாது என்னும் பயனிலையையும் மிகும் என்னும் பயனிலையையும் கொண்டு நிற்கின்றன. இவையிரண்டும் வேவ்வேறு பொருளுடைய பயனிலை களாகும்,

" ஆறன் மருங்கிற் குற்றியலுகரம் " என்னும் நூற்பாவில் ஈறு சினை என்னும் இரண்டு எழுவாயும் கெடுதல் வேண்டும் என்னும் ஒரே வினையின் உடன்பாட்டுப் பொருளோடும் எதிர்மறைப் பொருளோடும் முடிகின்றன அஃதாவது ஈறு கெடும், சினை கெடாது, நிற்கும் என்பதாகும். நூறென் கிளவி என்னும் நூற்பாவிலோ ஈறு கெடாது நிற்கும் ஒற்று மிகும் என்பது பொருள். மற்று நூறென் கிளவி என்னும் நூற்பாவில் ஈறு சினை ஒழிய இன ஒற்று மிகுமே எனப் பாடம் இருப்பின் ஈறு மிகாது நிற்ப இன ஒற்று மிகும் என்பதே பொருளாகுமின்றிக் கெடாது நிற்ப என்பது பொருளாகாது என்பதை ஓர்க. அதனான் ஒழியாது என்பதே உண்மைப் பாடம் என்று தெளியலாம்.

இனி " முற்றுமற்றொரோ வழி " என்னும் நன்னூலார் கருத்தையும் அதனை ஏற்று அதற்கேற்ப உரை கூறிய உரையாளர் கருத்துக்களையும் இனிச் சிறிது காண்போம்'

ஆக இதுகாறுங் கூறியவாற்றான் குற்றியலுகரம் உயிர்வரின் கெடாமல் மெய்யீறு போல உயிரேற இடந்தந்து இணைந்து தன் பொருள் தோன்ற நிற்கும் என்பதும், உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும் என்ற நன்னூலார் கருத்துத் தமிழ் மொழியியல்பிற்கு ஒவ்வாததென்பதும், நன்னூலின் தாக்குதலால் மருண்டுரைத்த உரையாசிரியர்களின் கூற்றுக்களும் ஏற்புடையவல்ல என்பதும், உயிர் ஏறி முடியும் என்னும் கொள்கையினராயினும் இரெட்டியாரின் விளக்கங்கள் நூலாசிரியன் கருத்திற்கு இயையாதன என்பதும் பிறவும் புலப்படும், இது நிற்க.

தனிக் குறிலேச் சாராமல் வல்லினத்தின் மேல் ஊர்ந்துவரும் உகரம் யாவும் குற்றியலுகரம் என்பதும் மெல்லின இடையின ஒற்றுக்களின் மேலும் தனிக் குறிலைச் சார்ந்த வல்லின ஒற்றுக்களின் மேலும் ஏறி நிற்கும் உகரம் முற்றுகரம் என்பதும் அவர்தம் கருத்தாகும். இம்முற்றுகரங்களின் முன் உயிர் வந்து புணரின் உடம்படு மெய் பெறும் அல்லது கெட்டுப்போகும் என்பது அவர்தம் கருத்து, எடுத்துக்காட்டாக கடு + அழகிது = கடுவழகிது என்றும், அது + அன் + ஐ = அதனை என்றும் கதவு + அழகிது = கதவழகிது என்றும் வருவனவற்றைக் காட்டுவர். 'கெட்டுப்போதலையே முற்றுமற்று ஒரோவழி எனக்கொள்வர். நன்னூலார் கருத்தும் அதுவே.

இனி, அவர்கள் மெல்லின இடையின ஒற்றுக்களின்மேல் வரும் உகரம் ஈற்றுச் சொற்களை எல்லாம் முற்றுகரச் சொல்லாகக் கொள்ளினும் சிலவற்றை மட்டுமே இயல்பீருகக் கொள்வர். உகரமொடு புணரும் புள்ளியீருக வருவனவற்றை விதியீருகக்கொள்வர்.

ஆசிரியர் ஈருகும் மெய்களுள் புகர ரகரம் தவிரப் பிறவற்றிற்குச் சாரியை விதித்துள்ளார். வகரக் கிளவி நான்மொழியீற்றதாகலின் 'தெவ்' என்பதற்கு மட்டும் உகரச் சாரியை விதித்துள்ளார். அதனுன் இக்கொள்கையினர் கதவு களவு கனவு அளவு செலவு முதலியவாக வரும் சொற்களையே இயல்பீற்றுச் சொற்களாகக் கருதி இவை கதவழகிது - களவியல், கனவில்லை அளவிடுதல் - செலவழகிது எனப் புணர்தலின் முற்றுகரம் கெடுமெனக் கூறியுள்ளனர்.

நச்சினார்க்கினியர்

'' சுட்டுமுதல் உகரம் அன்னொடுசிவணி
ஒட்டிய மெய்யொழித்து உகரங்கெடுமே '' (எழு—177)

என்னும் நூற்பாவின் ஒட்டிய என்பதனை மிகையாகக் கொண்டு

'' சுட்டுமுதல் உகரமேயன்றிப் பிற உகரமும் உயிர்வரு வழிக் கெடுவன கொள்க. அவை கதவு களவு கனவு என நிறுத்தி அழகிது இல்லை என வருவித்து உகரங் கெடுத்து முடிக்க'' என்று கூறி மேலும், '' இவற்றை வகர ஈருக்கி உகரம் பெற்றன என்று கோடுமெனின், வழக்கின் கண்ணும் செய்யுட்கண்ணும் பயின்று வரும் வகர ஈறுகளை ஒழித்து ஆசிரியர் வகரக் கிளவி நான்மொழியீற்றது (எழு - 81) என்ருற்போல வரைந்தோதல் குறைக்கூறலாமாதலின், அவை உகர ஈறென்று கொள்க. அவை செலவு, வரவு, தரவு, கனவு என வழக்கின்கண்ணும் புணர்கள் உடைத்தாற்புணர்வு பாடறி

யாதானை இரவு, கண்ணுரக் காணக்கதவு எனச் செய்யுட்கண்ணும் பயின்றுவருமாறு உணர்க '' எனக் கூறினர்.

செலவினும், வரவினும், தரவினும் என்றும், வரைவுடம்படுதலும் என்றும், களவறிவுறினும் என்றும், கனவொடுமயங்கல் என்றும் பயில வழங்கும் ஆசிரியர் இவற்றை இயல்பீருகக் கருதியிருப்பின் இவை புணர்தற்கு விதி கூறுமற் போகார். மாருக

'' உ ஊகாரம் நவவொடு நவிலா என்றும் வலியுறுத்திச் சென்றுள்ளார். இவற்றை வகர ஈருகக் கோடுமெனின்

'' வகரக் கிளவி நான்மொழியீற்றது, என வரையறை கூறியுள்ளமையின் களவு, கனவு முதலியவை வகர ஈற்றுச் சொற்கள் அல்ல என்பது புலனும். மற்று இவை எவ்வீற்றவெனின் ? இவை

ஆகார ஈறு திரிந்து உகரச் சாரியை பெற்றனவும், புள்ளியீறுகள் பெற்ற சாரியையின் பின் தொழிற்பெயர் விகுதி பெற்றனவும், தொழிற்பெயர் விகுதிபெற்றனவும் பண்புப் பெயர் விகுதி பெற்றனவும் வியங்கோள் விகுதி குன்றி நிற்பனவும் பிறவுமாம் என்க.

இவற்றைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்களின் வாயிலாகத் தெளியலாம்.

1 ஆகார ஈறு அகரமாய்ப் பின்னர் உகரம் பெற்று வரும்.

நிலா > நில < நிலவு	தளா > தள < தளவு
கனா > கன < கனவு	பிணா > பிண < பிணவு
குரா > குர < குரவு	அரா > அர < அரவு
பலா > பல < பலவு	விழா > விழ < விழவு
சுறா > சுற < சுறவு	பிடா > பிட < பிடவு
புறா > புற < புறவு	உணா > உண < உணவு
தடா > தட < தடவு	முழா > முழ < முழவு
நறா > நற < நறவு	

இவற்றுள் சில குரவம், புறவம், தளவம் என மேலுமொரு அம்சாரியைபெற்றும், பிணவல் என உடைமைப் பொருள் விகுதி பெற்றும் வரும். இவை முதற்கண் செய்யுள் வழக்காகிப் பின்னர் உலக வழக்கினும் பயில்வன.

2 புள்ளியீறுகள் தொழிற்பெயர் விகுதிஏற்றற்கண் சாரியை பெற்று ஏற்பனவும் — சாரியையின்றி ஏற்பனவும்

செல் > செல < செலவு	வாழ் — வாழ்வு
பொல் > பொலி < பொலிவு	புகல் — புகல்வு
கள் > கள < களவு	அதிர் — அதிர்வு
உய் — உய்வு	
தொய் — தொய்வு	
சேர் — சேர்வு	
பார் — பார்வு	
தேர் — தேர்வு	
நிகழ் — நிகழ்வு	

கள்வன் என் பதில் கள் என்பதே முதனிலை இதனைக் கள்வர், கள்ளாமை கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளம் எனவரும் இரு வகை வழக்குகளான் உணரலாம்.

3 உயிரீற்று முதனிலை (பகுதி)த் தொழிற்பெயர்கள்விகுதி பெற்று வருபவை

அள — அளவு	முனி — முனிவு
நடு — நடவு	கனி — கனிவு
செறி — செறிவு	குழை — குழைவு
புர — புரவு	பொரு — பொருவு
உறு — உறவு	நிறை — நிறைவு
வரை — வரைவு	விரை — விரைவு
அறி — அறிவு	துற — துறவு
துணி — துணிவு	குவி — குவ — குவவு

4 முதனிலைத் தொழிற் பெயர்கள் உகரம் பெற்று வருபவை

தா — தாவு (தாவுக)	உலா — உலாவு (உலாவுக)
தூ — தூவு (தூவுக)	உலா — உலவு (உலவுக)
ஏ — ஏவு	குலா — குலவு (குலாவுக)
	பரா — பராவு (பராவுக)
	பரா — பரவு (பரவுக)

இவை வியங்கோள் விகுதி குன்றியவை என்க.

5 ஒரெழுத்து ஈரெழுத்துப் பெயர்கள் உகரம் பெற்றவை

தே — தேவு மக — மகவு
நா — நாவு நடு — நடுவு
கா — காவு
நோ — நோவு

5 அத் தொழிற்பெயர் பண்புப்பெயராதல்

கர — கரவு
தக — தகவு (நடுவு நிலைமை)
முடம் — முடவு

6 தொழிற் பெயர்கள் மருவிப் பெயராக வருதல்

கது — கதுவு — கதவு
பொருந்து — பொருத்து — பொத்து — பொத — புதவு

இவை மேலும் அம் விகுதி பெற்றுக் கதவம் புதவம் எனவும் வரும். கதவு புதவு என்னும் இச்சொற்களின் பொருளை ஆய்ந்து இவை மரூஉ மொழிகள் என்பதைக் காட்டுதும்.

கதவு என்பது ஒரே தடுப்பாக நின்று நிலையோடு பதிவதாகும். புதவு என்பது இருபாலாக நிலையின் இருபக்கத்தும் இணைந்து நின்று தம்முள் பொருந்துவதாகும். ஆகவே கத என்பதற்குப் பற்றி நிற்றல் என்னும் பொருளின்மையின் அது கது என்பதன் திரிபே யாம். கது என்பது அப்பொருள் தருவதனை மேற்கதுவாய் கீழ்க் கதுவாய் ''நல்லராக்கதுவியாங்கு'' எனவரும் வழக்குக்களான் உணரலாம். புத என்பதற்குப் பொருந்துதல் என்னும் பொருளின் மையின் பொருந்து என்பது — பொத்து என்றாகிப் பின்னரப்பு'' என மருவியதாகும் ''பொல்லம் பொத்திய'' எனவரும் வழக் கால் இதனை நன்குணரலாம். இவற்றைக் கதுவு — பொதுவு எனக்கொள்ளாமல் இவ்வாறு திரிந்தற்குக் காரணம் தொழிற் சொல்லை ஒருபொருளை வரைந்து சுட்டும் பெயராக்குதற்கண் இவ்வாறு திரித்து அமைத்துக்கொள்ளுதல் இலக்கண ஆசிரியர்கள் துணியாகும் முன்னை — முகனை என்பதை மோனை என்றும், எதிர்கை என்பதை எதுகை என்றும் இவை போல வேறு சில வற்றை அமைத்துக்கொண்டமையால் இதனைத் தெளியலாம்.

இவையிரண்டும் (Door) என்னும் பொருளில் வருதல் பற்றிப் புதவக்கதவம் என இணைத்துச் சிலப்பதிகாரத்தில் வழங்கினர் இளங்கோவடிகள். இதுகாறுங் கூறியவாற்றால் களவு கனவு செலவு ஏவு மகவு முதலாக வரும் சொற்கள் இயல்பீற்றன அல்லவென்பதும். அவை தொழிற்பெயர் விகுதியும் பண்புப் பெயர் விகுதியும் சாரியையுமாய உகரம் வந்து இணைந்தவை என்பது புலனும்-

மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணி இயங்குதல் போல இவை உகரம் பெற்று வழங்கும் என்பதும், மெய்யின்கண் பிறஉயிர் ஏறுங்கால் சாரியை அகரம் நீங்கிவிடுதல் போல் இச்சொற்கள் உயிர் முதன்மொழியோடு புணருமிடத்து உகரம் நீங்க வருமொழி உயிரை ஏற்றுக்கொள்ளும் என்பதும் உகரம்நீங்குங்கால்அது நின்ற உடம்படுமெய் கெடாது நிற்ப அதன்மேல் வருமொழி உயிர் ஏறி முடியும் என்பதும் தெளிவாம். எனவே.

கள் — கள—களவு களவ் + இயல் களவியல். கத — கதவு— கதவ் — + அழகிது = கதவழகிது எனப்புணரும் என்க.

இனி அளபு. இழிப, உயர்பு,சார்பு,நேர்பு முதலாய புகரஈற்றுச் சொற்களும் விதியீறுகளேயாகும். இவை 'ப' என்னும் தொழிற் பெயர் விகுதிபுணர்ந்துஇரண்டிறந்திசைக்கும் தொடர்மொழியாய்க் குற்றியலுகர ஈறாக நின்றமையின் " அளபிறந்துயிர்த்தலும்." " உயர்பின் வழித்தே," " நேர்பசை " என்றாற்போல வரும் உயிர் ஏறி முடிந்தன என்க. இவற்றையும் உகர விகுதியாகக் கொள்ளாமல் புகர இறுதியாகக் கொள்வானேன் எனின் ? உகரம் விகுதியாயின் பகரம் உடம்படுமெய்யாகாமையின் எமத்துப் போதல் வேண்டும் என்க. மற்று இயல் நூலார் தொழிற்பெயர் விகுதிகளை வகுக்குங்கால். தல் அல் அம் ஐ கை கை கு பு உ வி சி என இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இடைச் சொற்களைக் கூறியுள்ளார். இவற்றுள் பு. உ. என வகுத்தவர் 'வு, என ஒன்லற வகுக்க வில்லை. காரணம் இடைச் சொற்கள் யாவும் வினைச்சொல்லின் திரிபாகவும் மரூஉவாகவும் இடுங்கிய சொற்களேயாதலின் அவ்வகையில் பு. உ என்பன ஒருவினைச் சொல்லின் உறுப்பாதல் வேண்டும் ஒருகால் இவை புரிதல் உறல் என்னும் சொற்களின் முதல் நிலையாக இருந்து குறைந்து இடைச்சொல்லளவில் வழங்குவதாகக் கருதற்கிடனுண்டு இதுபற்றி எனது இடைச்சொற்களின் ஆய்வுரையில் விளக்குவேன்.

எனவே, அளபு முதலாயவற்றைப் புகர விகுதியாகக் கொண்டு குற்றியலுகரத்தின்மேல் உயிரேறி முடிந்தது எனக் கொள்ளுதலே எளிமையும் செம்மையும் ஆகும் என்க.

[தொடரும்]

Statement about ownership and other particulars about Newspaper

TAMIL POZHIL

Form IV

1.	Place of Publication	:	Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur-2
2.	Periodicity of its Publication	:	Monthly
3.	Printer's Name	:	Thirumathi S. Nirmala, Proprietor, Annai Achagam
	Nationality	:	Indian
	Address	:	1734. Gandhiji Road, Karunthattamkudi, Thanjavur-613 002
4.	Publisher's Name	:	Thiru. V. Subramaniam, B.A.
	Nationality	:	Indian
	Address	:	Thiru. V. Subramaniam, B.A., Secretary, Karanthai Tamil Sangam. Thanjavur-613 002
5.	Editor's Name	:	Thiru. V. Subramaniam. B A,
	Nationality	:	Indian
	Address	:	Secretary. Karanthai Tamil Sangam Karunthattamkudi Thanjavur-613 002
6.	Name and address of individuals who own the newspaper and partners	:	Karanthai Tamil Sangam (Regd.) Karunthattamkudi. Thanjavur Pin: 613 002

I, V. Subramaniam hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. SUBRAMANIAM,
Publisher.